# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
...
## IN THE COURT OF District Munsif Cum Judicial Magistrate Court, Shencottai
## CC No. 476/2015

Deposition of the witness for Prosecution **PW 3**
Name : முகமது இப்ராகிம்

Father's/Husband's Name :

Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (02.09.2025)

A1, A3 present, A2 died.

<u>முதல் விசாரணை</u>

1. நான் ரவணசமுத்திரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் மளிகை கடையில் வேலை செய்கிறேன். அ.சா.1 எனது உடன்பிறந்த சகோதரி. எதிரிகளை தெரியும். கடந்த 2003 ம் வருடம் எனது சகோதரியை 1ம் எதிரிக்கு திருமணம் செய்து கொடுத்தோம். திருமணத்தின்போது 70 களஞ்சி நகையும், ரூபாய் 60 ஆயிரம் ரொக்கம், பண்ட பாத்திரம் சீர்வரிசையாக கொடுத்தோம். திருமணம் முடித்து அ.சா.1ம், 1ம் எதிரியும் எதிரி சர்தார் வீட்டில் ஒன்றாக கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து வந்தார்கள். சர்தார் பீடி கம்பெனி வைத்து நடத்தி வந்ததால் அதற்கு பணம் தேவைப்படுவதால் எனது தங்கையின் நகையை அடகு வைத்து செலவு செய்தார்கள். நாங்கள் வீட்டிற்கு சென்றால் கூட எனது தங்கையை என்னுடன் இணைத்து தவறாக பேசுவார்கள். நான் எனது தங்கையிடம் விசாரித்தபோது என்னையும், எனது தங்கையையும் இணைத்து தவறாக பேசுவதாக எனது தங்கை என்னிடம் கூறியதால், நான் எனது தங்கையின் கணவரிடமும், சர்தாரிடமும் கேட்டபோது அவர்கள் கண்டிப்பதாக கூறினார்கள்.

மீண்டும் மீண்டும் பிரச்சனை தொடர்ந்து வந்ததால் நகையை திருப்பி கேட்டபோது நகையை திருப்பி தந்தால் எனது தங்கை வேறு யாருடனாவது ஓடிப்போவாள் என்றும், நகையை திருப்பி கேட்டால் கொன்றுவிடுவேன் என்றும் என்னிடம் மிரட்டினார்கள். சர்தார் உள்ளூரில் நல்ல

இன்புளுயன்ஸ் உள்ளவர். எனது தங்கை பயந்துபோய் வீட்டிற்கு வந்துவிட்டார். அதன்பின்னர் நாங்கள் 2, 3 தடவை சமாதானம் பேசினோம். ஆனால் எதிரிகள் சமாதானமாக வரவில்லை. எனது தங்கைக்கு ஒரே ஒரு குழந்தை மட்டும் உள்ளது. எனது தங்கை எனது வீட்டில் தான் குடியிருந்து வருகிறார். இதுசம்மந்தமக எனது தங்கை புகார் கொடுத்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனக்கு சுமையாள்பேகம், செய்யது மசூது ஆகியோருக்கு இடையே ஏற்பட்ட பிரச்சனை எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அவர்கள் இருவரும் செங்கோட்டையில் சர்தார் வீட்டில் இருந்தபோது என்ன நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது' எனது தங்கச்சி சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான். சர்தார் என்பவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். நான் எனது தங்கச்சி ரவணசமுத்திரத்தில் செய்யது மசூதுடன் இருக்கும்போதுதான் பிரச்சனை வந்தது என்றால் சரியல்ல, செங்கோட்டையில் வைத்து தான் பிரச்சனை வந்தது. நான் ரவணசமுத்திரத்தில் இருப்பதால் அங்குள்ள ஜமாத்தை வைத்தும், செங்கோட்டையில் உள்ள ஜமாத்தை வைத்தும் பேசினோம் என்றால் சரிதான். சாதாரணமாக இஸ்லாமிய சமுதாயபடி திருமணம் செய்யும்போது மகர் கொடுத்து தான் திருமணம் செய்வார் என்றால் சரிதான். அப்துல் மஜித் மகர் கொடுத்திருந்தால் எங்களுடைய ஜமாத்திலும், அவர்களுடைய ஜமாத்திலும் பதிவு செய்திருப்பார்கள் என்றால் சரிதான்.

அதேபோல் நாங்கள் கொடுத்த ரொக்க பணமும், நகையும் ஜமாத் நோட்டில் பதிவு செய்யப்படும் என்றால் சரிதான். அம்பாசமுத்திரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எனது தங்கச்சி புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அங்கு நோட்டரி பப்ளிக் முன்பு சமரசமாக செல்வதாக இருவரும் எழுதி கொண்டார்கள் என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் நோட்டரி பப்ளிக் முன்பு எழுதிய ஆவணத்தை கொடுத்தேனா என்றால் கொடுத்தோம். அடிபுடி சண்டை எங்கு வைத்து நடந்தது என்றால் அடிபுடி சண்டை எதுவும் நடைபெறவில்லை.

நான் சொல்வதுபோல் சொன்ன நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், அசா.1 எனது சகோதரி என்பதால் நடக்காத சம்பவத்தை நடந்ததாக சொல்லியும், எனது தங்கச்சி சொல்லியதை வைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct. S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.09.02 12:49:45 +0530

District Munsif cum Judicial Magistrate,
Shenkottai